இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 198 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 15 – வியாழக்கிழமை 27 பிப்ரவரி 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 198 : Thiruvalluvar Year - 2056 - Maasi 15 - Thursday 27 February 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் – 2

# வஞ்சகத்தை எதிர்ப்போம் ! வளமான தமிழ்நாட்டைக் காப்போம் !



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் இந்தித் திணிப்புக்கு எதிரான இரண்டாவது மடல்.**

இந்தியை தி.மு.க. ஏன் இன்னமும் எதிர்க்கிறது என்று நம்மை நோக்கிக் கேட்பவர்களுக்கு, உங்களில் ஒருவனான நான் அன்போடு சொல்லக்கூடிய பதில், "இன்னமும் நீங்கள் அதைத் திணிப்பதால்தான், நாங்கள் அதனை எதிர்க்கிறோம்" என்பதே. திணிக்காவிட்டால், எதிர்க்கமாட்டோம். அதைத் தடுக்க மாட்டோம். தமிழ்நாட்டில் இந்தி எழுத்துகளை அழிக்கமாட்டோம். **தமிழர்களின் தனித்துவமான குணம் என்பது சுயமரியாதை உணர்வு. அதனை சீண்டிப் பார்க்க எவர் நினைத்தாலும் அனுமதிக்க மாட்டோம்.**

> **தமிழர்களின் தனித்துவமான குணம் என்பது சுயமரியாதை உணர்வு. அதனை சீண்டிப் பார்க்க எவர் நினைத்தாலும் அனுமதிக்க மாட்டோம்.**

"ரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துகளை அழித்துவிட்டால் வடமாநிலப் பயணிகள் எப்படி ரயில் நிறுத்தங்களை அடையாளம் காண்பார்கள்?" என்று இங்கேயுள்ள பா.ஜ.க. நிர்வாகிகள் சிலர் கேட்கிறார்கள். அவர்களுடைய இந்த உணர்வு நியாயமாக தமிழ் மீது இருந்திருக்க வேண்டும்.

நம்மைக் கேட்பதற்கு பதில், பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடமும், இந்தித் திணிப்பில் தீவிரமாக இருக்கும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் யாதவ் ஆகியோரிடமும், "காசி தமிழ்ச் சங்கமம் என்று நடத்துகிறீர்களே, கும்பமேளா நடக்கிறதே, **அதற்கு தமிழ்நாட்டிலிருந்தும் தென் மாநிலங்களில் இருந்தும் உத்தரப்பிரதேசம் செல்லும்பயணிகள்புரிந்துகொள்ளும் வகையில் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளில் பெயர்ப்பலகைகளை வைத் திருக்கிறீர்களா? இந்தியாவில் உள்ள மாநில மொழிகளைச் சமமாக மதித்து அறிவிப்புகளைச் செய்கிறீர்களா?"** என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்?

தமிழ்ப் பகையையே கொள்கையாகக் கொண்டு, தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் இயக்கத்தில் இணைந்திருப்பவர்கள் தமிழுக்காக-தமிழர் நலனுக்காக எப்படி குரல் கொடுப்பார்கள்? திராவிட இயக்கத்திற்கு எந்த மொழி மீதும் பகை கிடையாது. **தமிழ், வேறு எந்த மொழியையும் எதிரியாகக் கருதி அழித்ததில்லை. பிற மொழிகள் தன் மீது ஆதிக்கம் செலுத்த நினைத்தால் அதனை ஒருபோதும் அனுமதித்ததில்லை.** அவற்றை விரட்டியடிக்கும் என்பது தான் நமது பண்பாட்டு வரலாறு.

திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் அமைப்பான நீதிக்கட்சியை உருவாக்கிய தலைவர்களில் ஒருவரான பிட்டி. தியாகராயர் அவர்கள் தனது இல்லத்திலேயே சமஸ்கிருதம் உள்ளிட்ட பாடங்களைப் படிக்க விரும்புகிறவர்களுக்கு சாதிபேதம் பார்க்காமல் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தவர்.

நீதிக்கட்சி ஆட்சியின் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்று வகுப்புவாரி இடஒதுக்கீட்டிற்கான அரசாணையைப் பிறப்பித்தவரும், இந்து அறநிலையச் சட்டத்தை உருவாக்கிய வருமான பனகல் அரசர் இராமராய நிங்கர் அவர்கள் சமஸ்கிருதத்தில் உரையாற்றக் கூடிய அளவிற்கு அந்த மொழியை அறிந்திருந்தவர்.

அந்த நீதிக்கட்சியின் தலைவராக இருந்த ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களும், மறைமலையடிகள் போன்ற தமிழறிஞர்களும், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்து நின்று 1937 முதல் 1939 வரையிலான காலகட்டத்தில் முதல் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் முதன்மையாக நின்றனர். காரணம், சென்னை மாகாணத்தில் இருந்த பள்ளிகளில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தலைமையிலான அரசு இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி, வலிந்து திணித்ததால்தான்.

## உங்களில் ஒருவன்

சென்னை மாகாணமாக இருந்த அன்றைய தமிழ்நாடெங்கும் ஆதிக்க இந்திக்கு எதிராக கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. மாநாடுகள் நடத்தப்பட்டன. துறையூரில் 1937ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் நாள் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமையேற்றவர் 28 வயது இளைஞரான அறிஞர் அண்ணா அவர்கள்.

அந்த மாநாட்டில் தலைமையுரையாற்றும்போது, "எந்த ஆட்சி வந்தாலும் சரி, தமிழர் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவைகள் சில உள்ளன" என்றார் அண்ணா. தமிழரின் ஜீவநாடியாக இருப்பதில் முதன்மையானது என்று அண்ணா குறிப்பிட்டது தமிழ்மொழியைத்தான்.

**"நாம், தமிழர் என்பதைக் காட்டுவது தமிழ்மொழிதான். இதற்கு ஆபத்து வந்துவிட்டால் நமது ஒற்றுமை, கலை, நாகரிகம் யாவும் நாசம். ஆகவே தமிழைக் காப்பாற்றுங்கள்"** என்று தந்தை பெரியாரின் தளபதியான பேரறிஞர் அண்ணா அறைகூவல் விடுத்தார்.


தாய்மொழியைக் காத்திட தமிழ்நாடு திரண்டது. இன்றைய தமிழ்நாட்டு பா.ஜ.க.வினர் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் உயர்த்திப் பிடித்து, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற சமூக நீதித் தத்துவத்தைக் கொண்ட தமிழைப் பின் தள்ள நினைக்கும் எண்ணம் கொண்டவர்கள் அப்போதும் இருந்தார்கள்.

இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கிய அன்றைய இராஜாஜி அரசின் செயலை வரவேற்றதுடன், மேல்நிலை வகுப்புகளில் சமஸ்கிருதத்தை விருப்பப் பாடமாக வைக்க வேண்டும் என்று பத்திரிகைகளில் தலையங்கங்கள் எழுதப்பட்டன. காங்கிரஸ் தலைவரான சத்தியமூர்த்தி அவர்கள், "வருணாசிரம தர்மம் காப்பாற்றப்படவும், கிராம ராஜ்ஜியம்ஏற்படவும் வடமொழியை - சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடம் ஆக்க வேண்டும்" என்று கூறினார். இவற்றையெல்லாம் எதிர்த்துதான் பெரியார் தலைமையில் போராட்டக் களம் புகுந்தனர் தமிழர்கள்.

**மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை முதலில் நுழைத்து, அதனைத் தொடர்ந்து சமஸ்கிருதத்தையும் திணித்து, தமிழையும் தமிழர் பண்பாட்டையும் சிதைக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசினுடைய திட்டத்தின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு தமிழ்நாடு முழுவீச்சாக இன்றைக்கு எதிர்க்கிறது** என்றால், அதற்கான அடித்தளத்தைத் திராவிட இயக்கத் தலைவர்கள் அன்றைக்கே வலு வாகக் கட்டமைத்திருக்கிறார்கள்.

> **தாழ்ந்த தமிழகத்தை நிமிர்த்தி உயர்த்தியது திராவிட இயக்கம். தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் வஞ்சகத்தைத் தொடர்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசாங்கம்.**

தமிழ் வளர்த்த அறிஞர்களான மறைமலையடிகள், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், தமிழவேள் உமா மகேசுவரனார், நாவலர் சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட பலரும் தாய்மொழியைக் காப்பதற்காக, தந்தை பெரியார் அவர்கள் முன்னெடுத்த இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போராட்டத்தில் பங்கேற்றனர்.




உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவனான நான் இன்று (பிப்ரவரி 25) இந்தக் கடிதத்தை எழுதும்

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்